DUPLICATE

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

விரோதிஹு (1889) ஆவணி மீ ௨௨ ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப்பட்டினம்: வருடத்துக்கு ரூ. ௨-௮௦.
வெளியூர், இந்தியா: " ரூ. ௪-௫௦.
தொலைவுப்பகுதி: " ரூ. ௪-௫௦.
தனிப்பிரதி சதம் ௬.
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்	ரூ.	௧-௫௦.
" அரைக்கலம்	ரூ.	௯-௦௦.
" கால்கலம்	ரூ.	௩-௭௫.
" ஒரு அங்குலம்		-௬௫.

அடுத்தமுறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றி கவனிக்கப்படா.

புத்தகம் — ௩௨. யாழ்ப்பாணம்:—துர்மதிஹு சித்திரைமீ ௧௬ உ; ௧௯௨௧-ம் ஆ ஏப்ரில்மீ ௨௮ உ. இலக்கம் — ௩௭

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப்பிரானுர்தந்த
வார்பூத்த வதிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்த விநாயகன்றான் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

சாலாமிஸ்ரி லேகியம்.

1.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், லோகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஜுரவருஷத்தால் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் கோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைறாத்தலுக்கு ரூபா ௧0. கால் றாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொலைவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார
வைத்தியசாலை,
இல; 91 முதல் குறுக்குத் தெரு, கொழும்பு.

இரவில் மணி பார்க்கும்
8 மூலை ரேடியம்
ரிஸ்லெட் கெடியாரம்



8 மூலை இக்கல் ரிஸ்லெட் ரேடியம்
கெடியாரம் 1-க்கு ரூபா 7 8 0.
மூலை இல்லாத ரவுண்டு ரிஸ்லெட்
கெடியாரம்1-க்கு ரூபா 6 8 0.

செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்ப முடியாது.

டி. சி. நாகலிங்கம் [illegible] வுண்டு கோ.
பார்க்டவுன் போஸ்டு,
(Y. 2.) மதறாஸ்.

அசாதி ரோகங்கட்குப் பிரத்தியக்ஷ அவுஷதங்கள்.

[நமது மருந்துகளின் குணங்களை அநேக ஜனங்கள் அறிந்திருப்பதால் அதிகம் சொல்லத் தேவையில்லை.]

காமவிலாச லேகியம்
அல்லது
சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்து பல வியாதிகளைக் குணப்படுத்தியதற்காய் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் நன்மை சுகம் முதலியவைகளை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்பொழுது இந்த லேகியத்தை பிரசுரித்துவருகிறேன். இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமா மஸ்தகா, பீதாரு சாலாமிஸ்ரி, சப்பேத் முஸ்லி, பிஸ்தான், சாரப்பருப்பு, வாதாம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தப்பஸ்பம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிகை வகைகளும் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் நீரிழிவு, வெள்ளை, நீர்மாவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துக்குள் உண்டாயிருக்கும் அண்டவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிடுவதால் சூதகவாய்வு பிரசவ அறையில் உண்டாகும் பல நோய்கள் நீர்ந்து பாலை விர்த்தி செய்து தேகத்திற்குப் புஷ்டியையும் பலத்தையும் தரும்.

இறாத்தல் ஒன்று விலை ரூபா 20. கால் இறாத்தலுக்குக் குறைய அனுப்பப்படமாட்டாது.

கஸ்தூரி திராவகம்.

இந்தத் திராவகத்தில் ஒருநேரத்திற்கு நான்கு சொட்டு வீதம் ஒரு ஒயின் கிளாஸ் ஜலத்தில் விட்டு காலை, மாலை, இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நோயினால் தாங்கமுடியாத வருத்தமும் மூன் றுநாளையில் சுகந் தெரியும் 40 நாள் மருந்து சாப்பிட்டால் வியாதி நன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்கவாய்வு, இரத்தத்தையால் புருஷசக்தியற்று இருப்பவர்களுக்கு உள்ளுக்குச் சாப்பிட இத்திராவகமும் பிரதான காம்பில் பூச தைலமும் எடுத்து உபயோகிக்கவேண்டியது. இன்னும் இத் திராவகமானது இருமல், மூலச்சூடு, காசநோய், அதிக நாட்சென்ற வாதரோகம், தலைச்சுற்று, மூளைப் பலயீனம், ஞாபகசக்திக் குறைவு, கண்புகைச்சல், பார்வைக் குறைவு, நாட்சென்ற பிரமேகம் இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம். இந்த மருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், சாம்பிராணிப் பதங்கம், வேறு மூலிகைகளையுஞ் சேர்த்து திராவகம் வடித்து வைத்திருக்கிறேன். இந்த மருந்தைக் கொடுத்து அநேக பிணியாளிகளைச் சுகப்படுத்தி விலையுயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன். இப்போது எல்லாருடைய பிரயோஜனத்திற்காக சொற்ப கிரயத்திற்கு வெளியே பிரசித்தம் பண்ணியிருக்கிறேன். இந்த ஔஷதம் பித்தபாண்டு, மயக்கம், வாய்ச்சத் கட்டி, வயிற்றிலிருக்கும் நாரிகளுக்குக் கைகண்ட ஔஷதம்.

20 நாளைக்குச் சாப்பிடக்கூடிய அரை தவுன்சுக்கு விலை ரூபா 10. இதற்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது.

தஜ்ஜிபங்க தைலம்.

விபத்து நேர்ந்த காலத்தில் ஓர் அருமையான மித்திரன் உதவுமாப்போல் இத்தைலம், தேவைக்காகிய நரம்பிற் பூசுவதால் அற்றுப்போன சக்தி திரும்ப உண்டாகும். ஒரு தவுன்ஸ்விலை ரூ 2-50.

மிருத்துசஞ்சீவன அல்லது கஸ்தூரிமாத்திரை.

இம்மருந்தால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சுகமடைந்திருக்கிறார்கள். அவர்களில் அநேகர் அதன் குணகுணத்தை எமக்குக் கடிதமூலமாகவும் முகமுகமாகவும் வியந்து புகழ்ந்துபேசியிருக்கிறார்கள். அன்றியும், எமது அனுபோகமாய்க் கொடுஞ் சன்னிபால் மூழ்கியிருந்த அநேக வியாதியஸ்தர்களையும், இன்னும் அநேக மலேரியா முதலிய விஷக் காய்ச்சற்காரரையும் சுகப்படுத்தியுள்ளோம்.

எட்டுவிதமான சுரத்திற்கும், அசுத்த ஜலத்தினிருந்து உண்டுபடும் கொசு முதலான விஷ ஜீவஜெந்துக்கள் கடிக்கிறதினுலுண்டாகும் மலேரியா முதலான விஷக் காய்ச்சல்களுக்கும், பதினெட்டு விதமான ஜன்னிக்கும் இதில் ஒரு மாத்திரையை இஞ்சிச்சாற்றி லுரைத்துச் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட ஜன்னியும் ஒன்று அல்லது இரண்டுவேளை மருந்தில் குணந் தெரியும். பெரியவர்கள் 2 மாத்திரையும், சிறியவர்கள் 1 மாத்திரையும் எழுவேளை சாப்பிட்டால் ஜன்னி காய்ச்சல் முதலியன சுத்தமாய்ச் சுகமாகும்.

12 குளிகைகளின் விலை ரூபா 2.

வீரிய ஸ்தம்பனக் குளிகை.

இது ஒரு தேவ ஔஷதம்.

[illegible] யிர்தம்போன் றஔஷதத்தை உட்கொள் [illegible] [illegible] அநேக வியாதி [illegible] இரத்த சுத்தி சரீரசத்தி கொடுக்கும் ஒரு தேவ ஔஷதம். இம்மருந்தின் விரிவான குணங்களை அறிய விரும்புவோர் எமது கட்லாக்கைத் தருவித்துப் பார்த்துக்கொள்ளலாம். 12 குளிகை விலை ரூபா 2.

சங்கரக் குளிகை
அல்லது
மாதாந்த சுத்திசெய்க் குளிகை.

மாதாந்தம் மாதவிடாய் காணாமல் நின்றுபோய் அதனாலுண்டாகும்வயிற்றுவலி, இடுப்புவலி, கைகால் உளைச்சல், காந்தல், மண்டைவலி, திமிர், கண்காந்தல், பார்வைக்குறைவு, பெலவீனம், அஜீரணம், ஓங்காளம், நெஞ்சு ஏப்பம், கட்டிவாய்வு, மலச்சிக்கல், மூலச்சூடு, சிலருக்கு மாதவிடாய்காணாமலும், சிலருக்கு அதிகமாகவும், சிலருக்குச் சொற்பமாகவும், சிலருக்கு மாதவிடாயுண்டாகுமுன் வயிற்றுவலி முதலிய ரோகங்கள் கண்டு இடைவிடாத்துயரத்துக்குள்ளாகிறார்கள். இவ்வியாதி இலட்சணங்களை இன்னும் மேலதிகமாய் அறிய விரும்புபவர்கள் எமது கட்லாக்கைத் தருவித்துப் பார்த்துக்கொள்ளலாம். 21 நாள் சாப்பிடக்கூடிய 42 குளிகை விலை ரூபா 5.

இரசமணி.

அரைஞாணிற் சேர்த்து இடுப்பில் கட்டிக்கொள்ளக்கூடிய பெரிய மணியின் விலை ரூபா 3, அணு 8. சிறியமணியின் விலை ரூ. 1, அணு 8. தபாற்செலவு பிரத்தியேகம். இந்த மணி இடுப்பிலிருந்தால் பேய், பிசாசு, சூனியம், சொப்பனம், முதலியவை அருகில்வாராமாட்டா. மேலும் அநேகவிதமான வாய்வு, பிரமேகம், நீர்க்கடுப்பு, பீனிசம், கபாலச்சூடு முதலிய நோய்கள் தீரும்.

ததகஜகேசரி.

சொறிக்கரப்பன், அதாவது சொறித்தேமல், சொறிசிரங்கு, சொறிக்குஷ்டம், சரீரத்தின் தோலில் தடிப்பேறிய கருங்குஷ்டம், போர்திக்கால், அதாவது யானைக்காலில் வெடிப்புண்டாகி அதிலுண்டாகும் புழுக்களுக்கும் இன்னும் தோல் சம்பந்தமான வியாதிகட்கும் கைகண்ட களிப்பு. இக்களிப்பு என்னும் பூச்சுமருந்து, சொறிக்கரப்பன் அல்லது சொறித்தேமலுக்குப் பூசினால் 2 நிமிஷத்தில் குணங்காணலாம். 8 நாட்களில் பூர்த்தியாய்ச் சுகங்கிடைக்கும். மேற்சொல்லிய மற்றும் வருத்தங்கட்கு சிலநாள் பாவித்துவர சுகங்கிடைக்கும். விலை ½ டின் சதம் 50. முழுடின் ரூபா 1.

மேற்கூறிய மருந்துகள் யாவற்றிற்கும் தபாற்செலவு பிரத்தியேகம். தொலைவாய் இராச்சியங்கட்கு வி. பீ. சட்டமொச்சட்டம் இல்லாததால் மருந்து தருவிக்க விரும்புவோர்கள் முற்பணம் அனுப்பவேண்டியது.

எம். கேங்காப்பிரசாத் பண்டிதர்,
ஆதி ஆயுர்வேத ஆரோக
அநாதக்ஷர வைத்தியசாலை,
69-ம் நம்பர், முதல் மருதானை,
கொழும்பு.

☞ மருந்துகளுக்கு எழுதும்போது இப்பத்திரிகையையுங் குறிப்பிடுக. Y. 4.

தனலக்ஷ்மி சில்க் சேலைகள்.

Q. 10.

கலியாணச் சடங்கு முதலிய விசேஷநாளங்களிற் பாவிக்கக்கூடியதும், இந்தியாவில் இந்தியர்களால் தயாரிக்கக்கூடியதும், புதுமாதிரியானதும், கெட்டிச் சாயமுமுள்ளது. உடை அழுத்தமானதும், உடல் பூராவும் பலவிதமான பூவேலைகள் செய்ததும், சின்னக் கரைபுள்ளதும், அழகான முந்தியுமான பட்டுச் சேலைகள்.

எல்லா நிறங்களிலும் இருக்கின்றன.

7 கஜம் சேலை 1 ரூபா 27—0—0.
7½ கஜம் சேலை 1 ரூபா 30—0—0.
8 கஜம் சேலை 1 ரூபா 35—0—0.
9 கஜம் சேலை 1 ரூபா 40—0—0.

ஒரே தடவையில் 6 சேலைகள் வாங்குகிறவர்களுக்கு 100 ரூபா ஐந்து வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

தனலட்சுமி சுதேச ஜவுளி மளிகை,
19, அம்மன்சன்னதி,
மதுரை,
தென் இந்தியா.
Tel. Address: "Murahari", Madura, (S. INDIA.)

சமரச போதினி.

இஃதொரு தமிழ் வாரப் பத்திரிகை. தஞ்சைமா நகரினின்றும் பிரதி புதன்கிழமைதோறும் [illegible] வெளிவருகிறது. தமிழ் ஜில்லாக்களில் எங்கும் சுதந்திர தாகத்தை எழுப்பிச் சீக்கிரம் இந்தியர்கள் பூரண சுய ஆட்சி பெறுவதற்கு நியாயக் கிளர்ச்சி செய்வதே இதன் முக்கிய நோக்கம் இந்தியர்களுடைய சுதந்தரத்தைப் பாதுகாப்பது இதன் முதல் விரதம். கிராமவாசிகளின் குறைகளை நீக்கிக் கிராமத்தைச் சீர்திருத்தும்படி செய்வதும் அதற்கு வழிகளைக் காண்பிப்பதும் இதன் வேலை இப்பத்திரிகையில் யாவராயிருந்தாலும், நியாயம் தவறியும் இந்தியர்களுடைய லட்சியத்திற்கு விரோதமாகவும் போவார்கள் இடைநிலையினின்று ஈவு இரக்கமின்றிக் கண்டிக்கப்படுவார்கள். வகுப்பு, ஜாதி, மதம் முதலிய பேதங்களைக் குறைத்து இந்திய சனசமூகத்தை நிர்மாணிப்பது இப்பத்திரிகையின் லட்சியம். இதற்கு வருஷ சந்தா தபால்கூலி யுள்பட ரூபா ஐந்து ஆறுமாசத்திற்கு ரூபா மூன்று. வெளிநாடுகளுக்கு ரூபாஏழு, தேசமுன்னேற்றத்திற் கவசியமான எல்லா விஷயங்களும் தெளிவாகவும் தைரியமாகவும் எழுதப்படும். மாதிரிப்பத்திரம் அனுப்பபடும்.

இ. சூரிய நாராயண ஐயர் பி. ஏ; பி. எல்;
பத்திராதிபர்,
"சமரசபோதினி" தஞ்சாவூர்.

மிக்க உபயோகமுள்ள தமிழ்ப் புஸ்தகங்கள்.

பத்திவிளக்கம் (ஈசுவரநிகண்டிதவிளக்க)	0-12-0
தத்துவஞானபோதனி (வேதாந்தநூல்)	0- 8-0
கந்தபுராணவசனச்சுருக்கம்	0- 8-0
குமாரஉற்பவம் (ஸ்கந்தர் விஷயம்)	0- 6-0
மஹாத்துமாக்கள் (சுஷராம்சான்)	0- 4-0
கும்பகோணம் நகரவர்ணக்கம் (யாத்திரைகாரரின் வழிகாட்டி)	0- 3-0
மஹாமஹோத்சவவைபவம்	0- 3-0
கர்ணன் (வியாதிபெற்றகொடையாளி)	0- 2-0

மங்களவிலாச புக்டிப்போ,
(M. 11) கும்பகோணம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தானவரவு.

அராலி பிரம்மஸ்ரீ க. கங்காதரக்குருக்களின் தர்மபத்தினியும் கொக்குவில் பிரம்மஸ்ரீ. ச. சந்திரசேகரக்குருக்களின் கனிஷ்டபுத்திரியுமாகிய யோகாம்பிகையம்மாளின் அபரக்கிரியையில் இச் சபைக்குச்சேர்த்தனுப்பிய ரூபா 1/- பெற்றும்.

நமது பத்திரிகாபிமானிகட்கு ஒரு விசேஷ விஞ்ஞாபனம்.

—o—

அபிமானம் பூண்ட அன்பர்காள்!

இவ்விந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்களின் பொருட்டுத் தங்களால் வரவேண்டிய கிரயத்தை அறவிடுதற்கும், புதிய பத்திராபிமானிகளைச் சேர்த்தற்கும அதிகாரங் கொடுத்து, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் பண்டிதரும், இந்துசாதனப் பத்திராசிரியருமாகிய ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை யவர்களை அனுப்புகின்றேம். இவர் வடமாகாணம் கிழ்மாகாணம் என்னுமிரண்டு மொழிந்த ஏனைய மாகாணங்கட்குச் செல்லுவர். ஆதலால் பத்திரிகாபிமானிகளாயுள்ள நீவிரனைவரும் அவர் உங்களிடம் வருஞ் சமையத்தில் உங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தை முற்றுகக் கொடுத்து அவர் தரும் பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்வதுடன் புதிய அபிமானிகளையுஞ் சேர்த்துக் கொடுத்து இன்னும் ஆகவேண்டிய வசதிகளையுஞ் செய்வீர்களென எதிர் பார்த்திருக்கின்றேம்.

இங்ஙனம்,
தங்களன்பன்,
ச. அம்பிகைபாகன்,
இந்துசாதன மானேஜர்.

யாழ்ப்பாணம்
இ. சா. ஆபீஸ்
7—4—21.

இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:—துர்மதி௵ சித்திரை௴ ௧௬௳.

புதுவருட சோபனம்.

புதிய வருடம் பிறந்தபின் இற்றைப் பிரசுரமே முதற்பிரசுரமாகவிருப்பதினுல் நாம் வழக்கம்போற் புதுவருட சோபனங் கூறுதல் முறையாகும். இப்புதுவருடம் நன்மைகளுடன் கூடிப் பிறந்திருக்கின்றது. எம்மைச் சென்றஇருவருடங்களாக வருத்திய பஞ்சம்முதலியன அறவே நீங்கிவிட, யாம் தொன்மைபோல் யாதும் குறைவின்றி இவ்வருடத்தில் வாழத்தக்கவர்களாகவிருக்கின்றேம். நம்மவர்களிடத்தில் சமயம் சாதி தேசம் பாஷை என்னுமிவ் விஷயங்களில் விசேஷ அபிமானந் தலைப்பட்டு வருகின்றது. இவ்வருடத்தில் இவ்வபிமானம் இன்னும் அதிக [illegible] யடையுமெனக் காத்திருக்கின்றேம். முன்னர் இல்லாத அரசியல்ஞான விருப்பும், அரசியல் விவகாரங்களைக் குறித்த கிளர்ச்சியும் இப்போது விசேஷமாக ஏற்பட்டிருக்கின்றன. நமது ஈடேற்றத்துக்கான விஷயங்கள் அனைத்தும் இவ்வருடந் தொடக்கமாக விருத்தியுறு மென்பது நமது நம்பிக்கை.

நிற்க, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யும் நமது அரசருக்கும், நமது தேசத்திலுள்ள எல்லோருக்கும் சாதி பேதம் சமயபேதம் பாராட்டாது சோபனங் கூறுகின்றேம். சைவச் சகோதரர்கட்கும் சைவத்தை வளர்த்துவரும் பெரியோர்கட்கும் சோபனம்உண்டாகவேண்டுமென விரும்புகின்றேம். நமது பத்திரிகையின் விருத்தியைச் சிந்தித்து அதனை அபிமானித்துவரும் அபிமானிகட்கும், காலந்தோறும் விஷயதானஞ்செய்து பத்திரத்திற்கு விசேஷ அழகையும் வாசிப்பவர்களுக்கு விசேஷ பலனையுஞ் செய்துவரும் நிருபர்களாகவுள்ள சகோதர சகோதரிகட்கும் சோபனங்கூறி அவர்கள் இதுகாறுஞ் செய்துவந்தவாறு இன்னுஞ் செய்துவரும் வண்ணம் சோபனஞ் சொல்லுகின்றேம். இவ்விந்துசாதன விருத்தியைக் குறித்து யாம் பிறவிடங்கட்குச் சென்று இதனுல் வரவேண்டிய பத்திரக்கிரயத்தைச் சேர்த்துவரும் இக்காலத்தில் எம்மைப் பெரிதுஞ் சன்மானித்துத் தங்கள் தங்களால் வரவேண்டிய கிரயம் முழுவதையேனும் ஒரு பாகத்தையேனுந் தந்து எம்மை ஊக்கப்படுத்திவரும் பத்திராபிமானிகட்கும், பேரபிமானங்காட்டிப் புது அபிமானிகளாகச் சேர்த்துள்ள நண்பர்கட்கும் சோபனங் கூறுகின்றேம். கிரயப்பணம்பெறும்பொருட்டு நம்மை அலட்சியஞ் செய்து தருவதாக வாக்களித்துத் தாராதொழிந்தவர்கட்கும் சோபனங்கூறி அவர்களுள்ளத்தில் பேரபிமானம் ஜனிக்கும்வண்ணம் இறைவன் திருவருளை வேண்டுகின்றேம். ஈற்றில் பகைவர் நண்பர் என்ற பேதம் பாராட்டாது சகலருக்கும் சோபனங் கூறி முடிக்கின்றேம்.

நமது இந்துசாதன நங்கை இவ்வருடத்தில் விசேஷ உடை தரித்து அபிமானிகட்கெல்லாம் பெரும் பயனுதவும்வண்ணம் எல்லாம் வல்ல இறைவனது திருவருளையும் பத்திராபிமானிகளின் பேருதவியையும் வேண்டிநிற்கின்றேம். சர்வமங்களமுண்டாவதாக.

வடமாகாணப் பிரதிநிதித் தெரிவு.

சட்டநிரூபணசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்தற்குத் தகுதியுள்ளவர்களுடைய தொகை கூடியபகுதி இலங்கையில் வடமாகாணமே. இவ்வருடம் அநேகருடைய பெயர்கள் பதிவுசெய்யப்படவில்லை. பதிவுசெய்தவர்களுடைய முழுத் தொகை 13937.

சென்ற வியாழக்கிழமை வடமாகாணம் முழுதும பெருங் கிளர்ச்சியா யிருந்தது. அநேக மோட்டர் ரதங்கள் கொழும்பு, அநுராசபுரம், திரிகோணமலை என்னுமிடங்களி லிருந்து வருவிக்கப்பட்டன. றிக்ஷோ, குதிரைவண்டி, மாட்டுவண்டி முதலியனவெல்லாம் சம்மதங் கொடுப்போரைக் கொண்டுபோவதும் வருவதுமா யிருந்தன. ஒன்பது இடங்களில் காலை ஏழுமணி தொடக்கம் மாலை ஆறேகால் மணிவரைக்கும் சம்மதங் கொடுபட்டது. 13937 பேருள் 10735 பேர் சம்மதங் கொடுத்தார்கள்.

சனப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுதற்கு முற்பட்டு நின்ற ஸ்ரீ வை. துரைசுவாமி, ஸ்ரீ ஆ. கனகரத்தினம் என்னுமிருவருள் ஸ்ரீ துரைசுவாமி யவர்களே கூடிய சம்மதி பெற்றுத் தெரிவு செய்யப்பட்டனர். ஸ்ரீ துரைசுவாமியவர்கள் ஊரவர்கட்கு நன்மை செய்யவேண்டு மென்னும் நோக்கத்தையே பிரதானமாகக்கொண்டு, தாம் தெரிவுசெய்யப்படும் விஷயத்தின் பொருட்டுச் செலவையும் சிரமத்தையும் பாராது மிக்க முயற்சியுடன் உழைத்து வந்தனர், இவர்பொருட்டுச் சம்மதி கொடுத்தவர்களின் தொகை 5836. இவர் வாக்கு வல்லமையும் தேசாபிமானமும் பொருந்தியவர். யாழ்ப்பாணத்தில் ஒரு தக்க நியாயதுரந்தரராக விளங்குபவர். கல்கத்தாச் சர்வகலாசங்கத்தாரால் நடத்தப்படும் பி. ஏ. பரீக்ஷையில் விசேஷசித்தியடைந்துள்ளவர். யாழ்ப்பாணத்திற் பொதுநன்மையாக நடைபெறும் பலவிஷயங்களிலும் சம்பந்தப்பட்டவர். யாழ்ப்பாணச் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராக இடைவிடாது சனநன்மையின்பொருட்டு உழைத்துவருபவர். அரசியல் ஞானம் பெரிதும் உடையவர். இலங்கை மகாசனசபையார் ஒத்துழையாமைமுறையை அனுசரித்த சமையத்தில் இவர் தாமும் அத்திட்[illegible] கிற் கலை[illegible] [illegible] செய்யப்ப[illegible] படாதொழிந்துநின்றனர். பின்னர் மகாசனசபையின் விருப்பத்துடனேயே பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்படுதற்கு முன்னின்றனர். இவருக்கு இப்பொழுது வயசு 43 வரையிலிருக்கும். இலங்கைச் சட்டநிரூபணசபையிற் பல திருத்தங்கள் செய்யப்படவேண்டியிருக்கும் இக்காலத்தில் இவரும் மற்றும் பிரதிநிதிகளுடன் சேர்ந்து அத்திருத்தங்களைச் செய்விப்பரென்பது சொல்லாதமையும். ஊரவர்கள் பொருட்டு எவ்வெவ் நன்மைகள் செய்யப்படவேண்டுமோ அவற்றையெல்லாம்செய்விப்பரென நாம் எதிர்பார்த்திருக்கின்றேம்.

இச்சமையத்தில் ஸ்ரீ கனகரத்தினமவர்களைப்பற்றி யாம் யாதுங் கூறுது விடுவது முறையன்று. ஸ்ரீ கனகரத்தின மவர்கள் ஒரு தாணியாகவிருந்தும் உலகத்திற்கு நன்மை செய்யவேண்டுமென்னும் பேரவாவினுல் அத்தொழிலைவிடுத்து "இலங்காபிமானி" என்னும் பத்திரிகையின் ஆசிரியராகி அப்பத்திரிகை வாயிலாகவும் வேறு மார்க்கங்களாகவும் சென்ற 13 வருடகாலமாக தேச நன்மையின் பொருட்டு உழைத்துவருகின்றுர், இவர் தகுந்த அரசியல் ஞானமுடையவர். சிறந்த பத்திராசிரியர். இவருக்காகச் சம்மதி கொடுத்தவரின் தொகை 4443. இவர் இம்முறை அபஜய மடைந்தாலும் இதனுல் தைரியவீனமுறுது தாம் செய்துவரும் நன்மைகளைச் செய்துவருவா ரென்றும், அடுத்த முறைகளில் வடமாகாணப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப் பெறுவரென்றும் யாங் காத்திருக்கின்றேம். அரசியல் விஷயங்களிலாயினும் வேறு எவ்வகையான பெருங்கருமங்களிலாயினும் பெயர்பெற்று விளங்கிய மகான்களெல்லாரும் முதன்முறையே சித்தியடைந்தன ரல்லரென்பதும் பன்முறைபிரதிகூலமடைந்து பின்னர்ச் சித்தியெய்திப் பெயர்பெற்று விளங்கினரென்பதும் சரித்திர ஆராய்ச்சியுடையார்க்கு இனிது விளங்குமன்றே.

இவ்விருபகுதியாருக்குமாக வேலை செய்தலாகள் அநேகர். தத்தம் பகுதியார் செயமடையவேண்டு மென்னும் பேரவா அதிகமா யிருந்ததனுல் ஒவ்வொரு பகுதியிலு மிருந்த ஊக்கம் சொல்லுதற் கரிதன்று தகப்பன் ஒருகட்சியாகவும், மகன் எதிர்க் கட்சியாகவும், தமையன் ஒரு கட்சி, தம்பி மறு கட்சியாகவும் நின்று வேலைசெய்தனர். இது யாழ்ப்பாண வாசிகளுக்கு அரசியல்ஞானமுதித்திருக்கிறதென்பதற்குப் போதிய சான்றும். இத்தெரிவு காரணமாக, சில இடங்களில் சிநேகிதர்களுள்ளும் இனசனங்களுள்ளும் வெறுப்பு பகை பிரிவுகளும் உண்டாயின. ஆனுல் ஒருவர் தெரிவு செய்யப்பட்டவுடன் இவைகளெல்லாம் அப்போதைக்கப்போதே மறக்கப்படவேண்டியன. ஸ்ரீ துரைசுவாமி அவர்கள் சனப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டவுடன்அவருக்கு எதிர்க் கட்சியாய் வேலைசெய்தவர்களும் உடனே அவர் வீட்டுக்குப் போய்ச் சந்தோஷங் கொண்டாடிச் சென்றனர். ஸ்ரீ துரைசுவாமி அவர்களும் தாம் சனப் பிரதிநிதியாய் வந்தமையின் தம்மிடத்தில் வந்தவர்கள் தமக்கு மாறுக வேலைசெய்தவர்களாயினும் அதைப் பாராட்டாது அவர்களை அன்போடு உபசரித்து நண்புகொண்டனர். மத்தியமாகாணத்திலும் சனப் பிரதிநிதிகளாக வர முற்பட்ட விஜயக்கோன், பெறெரு, சில்வா என்னும் மூவருள் ஜயமடைந்த விஜயக்கோன் அவர்கள் மற்றை இருவரோடும் நண்புகொண்டு மோட்டர் ரதத்தில் ஏறி ஊர்வலம் வந்தனர். இவைகளை உற்றுணர்ந்து, வடமாகாணத்தில் இருபகுதியாய் நின்று வேலை செய்த நம்மவர்கள் ஒருவர்க்கொருவர் நண்பு பாராட்டி இன்னும் நம் தேய நன்மையின் பொருட்டு உழைப்பார்களாக.

கடவுள் அருட்பர தாண்டவர்.

கடவுள் தமது அருட் சத்தியையே வடிவாகக் கொண்டு ஆன்ம கோடிகளை எல்லாம் அவ்வவர் பக்குவத்துக் கியைந்தவாறு உயிர்க் குயிராய் நின்று ஆட்டுவர். இங்ஙனம் ஆட்டுவதே அவருடைய தாண்டவமாகும். பரதந்திரராகிய ஆன்மாக்களெல்லாம் சுவதந்திரராகிய கடவுளையே பற்றுக்கோடாகக் கொண்டு அவருடைய அகண்ட பரிபூரணத்துள் அமைந்துகிடத்தலால், அவர் இயக்கினுலன்றித் தாம் இயக்கமாட்டா. அந்த உயிர்களையெல்லாம் இயக்கவேண்டிக் கடவுள் உயிர்க்குயிராய் நின்று இயங்கும் இயக்கம் அவருடைய திருக்கூத்தெனப்படும். இந்தத் திருக்கூத்தாவது சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமாகிய பஞ்சகிருத்தியங்களாம். இந்தப் பஞ்சகிருத்தியங்களையும் அவர் சிறிதாவது சலிப்பின்றி [illegible] காத்திரையா[illegible] லும், அவற்றுள் ஒன்றுவதுதம்பொருட்டாகாது அனைத்தும் ஆன்மாக்களாகிய பிறர்பொருட்டேயாதலானும், அவைகள் அவருக்குக் கூத்தெனப்படும்.

இந்தக் கூத்து அதிசூக்குமமாக நிகழ்வதாதலின், இதனை ஆன்மாக்களெல்லாம் புலப்படக் கண்டு ஆனந்தம் பெருகுவது, அவர் நடராஜவடிவுகொண்டு இதனைத் தூலமாகவும் ஆட்டிக் காட்டுவர். இங்ஙனம் அவர் ஆடும் அங்கங்களுட் சிறந்தது பூமிக்குச் சுழுமுனைநாடியாயுள்ள சிதம்பரமாம், இந்தச் சிதம்பரம் புண்டரீகவீடெனப்படும். ஆன்மாக்களுடைய இதயதாமரையின்கண்வீற்றிருந்து அவர்களை ஆட்டுதற்பொருட்டுத் தாம் ஆடும் சூக்கும நடனத்தை, பஞ்சகிருத்தியம் போல்வதாகிய புண்டரீகபுரத்தில் வீற்றிருந்து அவர் தூலமுறையாக ஆட்டிக் காட்டுவர். சிதம்பரம் என்னும் சொல் சித்+அம்பரம் என்னும் இருபதங்களாலாயது. சித் என்பது அறிவு அல்லது ஞானம் எனப் பொருள்படும். அம்பரம் என்பது ஆகாயம் அல்லது வெளி எனப்படும். ஆகவே அவருடைய நடன அரங்கம் ஞானவெளி என்றுகும். அவர் ஞானவெளியில் நின்றே நிருத்தம் புரிவர் என்றபடி. இன்னமும் சித் என்பது அறிவுடை உயிர்களுக்குரியதோர் பெயராதலின், அவர் ஆன்மாக்களுடைய அறிவு வியஞ்சகத்துக்குரிய தானமாகிய இதயத்தின்கண் வீற்றிருந்து தாண்டவம்புரிவர் என்பதும் இதனுற் போந்த பொருளாதல் காண்க.

அவர் நடித்தருளும் இந்தத் தூல நடனத்திலே அவருடைய சூக்கும நடனம் அமைந்துகிடத்தலை அருட்டிருவாளர் எடுத்து விளக்கிப் போந்தார்கள். அவர் நிருத்தஞ்செய்யும்போது பிரபஞ்ச தோற்றத்துக்குக் காரணமாகிய நாதஒலியைப் பிறப்பித்து நிற்கும் டமருக மேந்திய திருக்காத்திலே சிருட்டி கிருத்தியம் அமைந்து விளங்கும். சகலசடப்பொருள்களையும அழித்தற்குரிய அக்கினியை ஏந்திய திருக்காத்திலே சங்காரகிருத்தியம் அமைந்து விளங்கும். ஆன்மாக்களைப் பிரபஞ்சத்தில் அழுத்தற்கு அறிகுறியாகப் பூமியின்கண் ஊன்றிய திருப்பாதத்திலே திரோபவகிருத்தியம் அமைந்து விளங்கும். அந்தப் பிரபஞ்சச் சிக்கில்நின்று விடுவித்தற்கு அறிகுறியாகப் பூமியிற் படாது தூக்கியதிருவடியிலே அநுக்கிரக கிருத்தியம் அமைந்து விளங்கும். இந்தக்கருத்தை விளக்கியே

தோற்றந் துடியதனிற் ரேயுந் திதியமைப்பிற், சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமாகு. ஊன்ற மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு,

என்று "உண்மை விளக்கம்" எடுத்துக் கூறும்.

சிவபெருமான் ஆன்மாக்களுக்கெல்லாம் பரான்மாவாக அவர்களுடைய இதயதாமரையில் கோயில்கொண்டு எழுந்தருளியிருத்தல்பற்றியே சிவதோற்றங்களுட் சிறந்த மானிடருடைய தேகம் சிவாலயமெனப்படுவது. இவ்வுண்மை

மானிட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானிட ராக்கை வடிவு சிதம்பரம்
மானிட ராக்கை வடிவு சதாசிவம்
மானிட ராக்கை வடிவு திருக்கூத்தே.

என்னும் திருமந்திரத்தாற் பெறப்படும். இதுபற்றியே சிவாலயங்களின் அமைப்பெல்லாம் மானிடதேக வடிவு கொண்டு விளங்குவது. மானிடதேகத்திலும் சிவபெருமானுக்கு உடம்பாகிய அண்டத்துக்கு ஒப்பாக அமைந்துள்ளமை தகரவித்தையின்கண்ணே எடுத்து விளக்கப்பட்டுள்ளது. ஆதலாற்றுன் அண்ட பிண்ட சமத்துவம் சாத்திரங்களிற் சாதிக்கப்படுவது.

இங்ஙனம் சிவெபருமான் உயிர்க்குயிராய் விளங்கி அசைந்தருளவே ஆன்மகோடிகள் எல்லாம் அசைந்திடும். இங்ஙனம் அசைந்தருள்வதாகிய அசபா நடனம் எனப்படும் சூக்குமநடனமே அவருடைய தூலநடனமாக வெளிப்பட விளக்குவது. இந்த நடனத்தின் அந்தரங்கார்த்தம், இந்நடனகாலத்து எடுத்தாளப்படும் தாள வரிசையின் பொருளை ஆராயுமிடத்தும் நமக்கெல்லாம் இனிது புலப்படும். தாளங்களுக்கெல்லாம் ஆதியாக விளங்குவன "தத்-தோம்" என்னும் இரண்டு பதங்கள். இவற்றின் பொருள் "நான்-நீ" என்பதேயாம் ஆகவே அவருடைய திருக்கூத்தின் நோக்கம் ஆன்மாக்களுக்கு அத்துவித முத்தியை அளித்தருள்வதேயாம்.

உலக முதல்வராகிய சிவபெருமான் தாமே உலகம் அனைத்துக்கும் அநாதி பிதாமாதா என்பதைக் காட்டுமாறு சத்தி [illegible] வீற்றிருக்காவென்ன, தாமே உலகம் அனைத்தையும் ஆட்டிவைக்கும் பரமநாடகன் என்பதைக் காட்டற்பொருட்டாக நடராஜமூர்த்தங் கொண்டு பஞ்சகிருத்திய அருட்பரதாண்டவம் புரிந்தருள்வர்.

இவ்வுண்மையை அறியமாட்டாத மூகரெல்லாம் "கூத்தாடுபவரும் கடவுளாவரோ" என்றும், "ஆதியிலே ஒரு கூத்தாடியாய்ப் பிரசித்திபெற்றுர் ஒருவரையே சைவர் தமக்குரிய கடவுளாய்க் கொண்டு வழிபடலாயினர்" என்றும் வாளா பிதற்றி அழிவர். சைவசமயத்திலே பொதியப்பெற்றுள்ள அந்தரங்க தத்துவார்த்தங்களெல்லாம் இவர்களுக்குப் பால் கொக்கின் வடிவினதாய்க் குருடனுக்குத்தோன்றியவாறே தோன்றும். எத்துணைப்பெருந் தத்துவஞானந்தான் இவர்களுக்கு முற்பட்டாலும் அவற்றை யெல்லாம் இவர்கள் தங்கள் புல்லறிவு சென்றவழித் திரிபுற விளங்கி மயங்குவதன்றி உண்மையைக் கண்டு அதன் றிப்பிய நலத்தைக் கண்டு சுவைப்பது ஒருபோதுங் கூடாது.

சமாச்சாரம்.

காலநிலை:—சென்ற ஞாயிற்றுக்கிழமை நல்ல மழை வருஷித்திருக்கின்றது. அதனுல் உஷ்ணம் குறைவு. தென்றற்காற்று இன்னுந் தொடங்கவில்லை.

முத்துச்சம்பா அரிசி:— இந்திய அரசினர் பின்னரும் 15000 தொன் நிறைகொண்ட முத்துச்சம்பா அரிசியை இலங்கைக்கு ஏற்றுமதி செய்தற்கு அனுமதி கொடுத்திருக்கின்றனர். இதுவுமன்றி நகரின் அரிசியும் விலை குறைந்திருக்கின்றதாம்.

புதிய நீர்நிலை:—உப்பாற்றின் கரையில் இருபாலைக்கணித்தாக சடுதியில் ஒரு நீர்நிலை தோன்றியிருக்கின்றது. இது வட்டாகாரமானது. இதன் குறுக்களவு ஒரு யார்வரையி லிருக்கும். ஆழம் 60 அடி வரையி லிருக்குமாம். சிலவருடங்கட்கு முன்னர் சிரணியி லுள்ள ஒரு வயலில் இத்தவிதமான நீர்நிலை உற்பத்தியாகி இப்பொழுது பாக்கிருப்பதை நாமனைவரு மறிவோம்.

கிளேறிக்கல் பரீக்ஷை:—சென்ற செவ்வாய்க்கிழமை தொடக்கம் கொழும்பில் நடைபெறும் இப்பரீக்ஷைக்கு 750 பேர்வரையிற் சென்றிருக்கின்றனர். இப்பரீட்சைக்குப் போவோர் வயசை இருபத்தொன்றிலிருந்து இருபத்துமூன்ருக்கியதினுல் இத்தொகை அதிகப்பட்டது போலும். இவருள் 50பேர்தான் சித்தியெய்தியவராகத் தெரிவு செய்யப்படுவர். கல்லூரி ஆசிரியர்களும் அதிகாரிகளும் இப்பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்துவிக்க முயற்சி செய்தால் எமது பிள்ளைகளுக்கு எவ்வளவோ நன்மையாகும்.

கொழும்பு விவேகானந்த சபை:—இச்சபையாரது விருப்பப்படி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் பண்டிதரும், 'இந்துசாதன' பத்திராசிரியருமாகிய ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை யவர்கள் "சமய நூற் கல்வி" என்னும் விஷயமாக இன்று மாலை 5-மணிவரையில் மேற்படி சபை மண்டபத்தில் ஒரு உபந்நியாசஞ் செய்வர். கடித.

பாரமுகம் எங்குமுண்டு:—இலங்கைச் சட்டநிருபணசபைப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தற்குக் குறித்த தினமாகிய ஏப்பிறல்மீ 21-ந்உ பிரசித்த விடுதலை நாளென அரசினர் 'கஜற்' பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கது. ஆனால் பிரசித்த நாளில் தெரிவு முதலியன செய்யப்படின் அவை பெலனற்றதாகுமெனப் பிரமாணமிருத்தலை யறிந்து அரசினர் முன் விளம்பரஞ் செய்திருந்த விடுதலை நாளை அந்நாளில்லாது மாற்றவேண்டியவ ராயினர்.

மாகாணப் பிரதிநிதிகள்:—மேல்மாகாணம் பட்டினப் பிரதிநிதி மிஸ்டர் ஜேம்ஸ்பீரிஸ். மேற்படி மாகாணம் எல். ஜே. பீ. ஏ. பிரதிநிதி மிஸ்டர் H. L. டீ மெல். மேல்மாகாணம் ஏ. பிரிவு மிஸ்டர் W. M. ராஜபக்சி. பீ. பிரிவு மிஸ்டர் E. W. பெரிரா. வடமேல்மாகாணம் மிஸ்டர் C. E. கொரியா. ஊவாமாகாணம் மிஸ்டர் D. H. கொத்தலாவெலை. கீழ்மாகாணம் ஸ்ரீ E. R. தம்பிமுத்து அவர்கள். தென்மாகாணம் மிஸ்டர் O. C. திலகரத்ன. வடமத்திய மாகாணம் மிஸ்டர் S. D. கிரிஷ்ணரத்ன. சப்பிரகாமுவா மாகாணம் கனம் W. E. பூத்திஜா. மத்திய மாகாணம் மிஸ்டர் A. C. G. விஜயக்கோன்.

தலைவரிப்பணங் கொடாமல் தெருவேலை செய்கின்றார்:—இலங்கையி லுள்ள வாலிபரையும் விருத்தரையும் பெண்களையுந் தவிர்ந்த மற்றெல்லோரும் வருடத்தில் ஆறுநாட்களுக்குத் தெருவேலை செய்யவேண்டும்; அது இஷ்டமில்லையாயின் குறித்த ஒரு தொகைப் பணத்தைத் தலைவரியாகக் கொடுக்கவேண்டுமென்பது அரசினர் பிரமாணம். ஆனால் எல்லாரும் தெருவேலை செய்யாது தலைவரிப்பணத்தையே கொடுத்துவருவது வழக்கமா யிருக்கின்றது. ஏழைகள் செல்வரென்னும் பேதமின்றி எவர்மீதும் ஒரே தொகைப் பணம் விதிக்கப்பட்டிருத்தலினால் இவ்வரி நியாயமானதன்றென்பது அறிவுடையோர் பலரது அபிப்பிராயம். இலங்கை வாலிப சபை (Young Lanka League) யாரும் இவ்வரியை நீக்குவித்தற்குப் பெரிதுமுயன்றும் பயன்படவில்லை. அதனால் அச்சபையார் தலைவரிப்பணங் கொடுப்பதில்லைத் தெருவேலை தான் செய்வதென்று ஒரு நிர்ணயத்தைச் செய்துவிட்டனர். அந்த நிர்ணயப்படி மேற்படி சபையின் அக்கிராசனராகிய அட்வக்கேட் மிஸ்டர் C. E. விக்டர்கொரியா அவர்கள் தலைவரிகொடாது 6 நாட்களுக்குத் தெருவேலை செய்யலாயினர். இவர் தெருவேலை செய்தபடியே எடுக்கப்பட்ட புகைப்படம் இத்தமீ 25-ந்உ பிரசுரமான கொழும்பு டெயிலி நியூஸ் என்னும் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. அந்தப் படத்தைப் பார்ப்பவர்களுள்ளத்தில் பெரும் அபிமானமுண்டாகுமென்பது நிச்சயம். இவர் வடமேல்மாகாணப் பிரதிநிதியாக இப்பொழுது தெரிவுசெய்யப்பட்டிருக்கும் மிஸ்டர் C. E. கொரியா அவர்களின் சகோதரர். தக்க தேசாபிமானி. இந்தியாவிலும் இவருக்கு ஒப்பான தேசாபிமானிகள் சிலரே உளரெனலாம். மேற்படி சங்கத்தின் ஏனைய அங்கத்தவர்களும் இவரைப் பின்பற்றுவரெனச் சொல்லப்படுகின்றது.

தேகவியோகம்.

—யாழ்ப்பாணம் ரேகுத் தலைவராயிருந்த ஸ்ரீ கனகசபையவர்கள் இந்த மாசம் 20உ புதன்கிழமை நல்லூரிலுள்ள தமது கிருகத்தில் தேகவியோகமாயினர் என்பதைக் கேட்பது துக்கமே. இவரது பிரேத தகனம் மறுநாள் செய்யப்பட்டது. கொழும்பு ரேகு கந்தோரில் உன்னத பதவியை வகித்திருப்பவரும் இவர் மைத்துனருமாகிய ஸ்ரீ. க. சுந்தரமவர்கள் முதலிய அநேக பிரபுக்கள் சமுகமாயிருந்தனர்.

அராலிச் சிவன்கோயில் ஸ்தானிகர் பிரம்ம ஸ்ரீ. சங். கங்காதரக்குருக்கள் அவர்களின் பௌத்திரரும், பிரம்மஸ்ரீ க. சுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் ஏகபுத்திரருமாகிய பிரம்மஸ்ரீ. க. கங்காதரக் குருக்களவர்களின் தர்மபத்தினியும், கொக்குவில் பிரம்மஸ்ரீ சங். இரகுநாதையர் அவர்களின் மருகர் பிரம்மஸ்ரீ ச. சந்திரசேகரக் குருக்களவர்களின் கனிஷ்ட புத்திரியுமாகிய ஸ்ரீமதி யோகாம்பிகையம்மாள் என்பவர் இத்தமீ 3-ந்உ வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்தனர். இருபது வயதுள்ள இவ்வம்மாளை இளமைப் பருவத்தில் இழந்து துன்புறும் இவர் கணவன் சுற்றமித்திரர் முதலியவர்களுக்குக் கடவுள் கிருபை பாலிப்பாராக. கடித.

—கொழும்பு ஹெண்டேசன் என்னும் வர்த்தகசாலையில் பிரதான தரகராய் விளங்கிய ஸ்ரீ தம்பையா சிவசிதம்பரம் அவர்கள், வெலகம்பிட்டியில் தமது தாயார் பெயர் கொண்டு விளங்கும் செல்லாச்சிதோட்டத்தில் இத்தமீ 2-ந்உ இரவு சடுதியாய் இறந்துவிட்டனர். இவர் யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டையி லுள்ள ஓர் கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர். நாவலப்பிட்டியில் உத்தியோகத்தி லமர்ந்திருந்த இவர் தந்தையாராகிய ஸ்ரீ தம்பையா அவர்கள் முனீஸ்வர ஆலயத்திற்கு 25 ஏக்கர் நிலம் தருமசாதனஞ் செய்துள்ளார். இவரும் இறக்கிறதற்குச் சில தினங்கட்கு முன் சமீபத்திலேயுள்ள தமது காணி ஒன்றை ஒரு கோயிலுக்குத் தருமசாதனஞ் செய்தவர். இவர் சென்தோமஸ் கல்லூரியில் இப்பொழுது சுப்பிறீம் கோட் நீதிபதியாயிருக்கும் கௌரவ சின்னதர் அவர்களுடைய மாணவராய்க் கல்வி பயின்றவர். வர்த்தக நிபுணர்; நீதி சாந்தம் தண்ணளி ஈசபக்தி தேசாபிமானம் தருமசிந்தை கொடை முதலிய சற்குணங்களிற் சிறந்த இப் புண்ணிய சீலரை இழந்து பரிதபிக்கும் இவர் சுற்றமித்திரருக்குக் கடவுள் கருணை புரிவாராக.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

வையாபாடல்:—இந்த யாழ்ப்பாணத்தைப் பரிபாலித்த செகராசசேகரமகாராசாவின் சமஸ்தானவித்துவானாக விளங்கிய வையாபுரி ஐயரால் விருத்தப்பாக்களால் இயற்றப்பெற்ற ஒருநூல் யாழ்ப்பாணத்துப் பழையசரித்திரத்தையும் ஆதியில் இந்தியாவிலிருந்து இங்குவந்து குடியேறிய தமிழர்களின்வரலாற்றையும் கூறுவது. மயில்வாகனப்புலவர் இயற்றிய யாழ்ப்பாணவைபவமாலைக் காதாரமான நூல்களுளொன்றாயுள்ளது. இதன் ஏட்டுப்பிரதியை மிகசிரமத்துடன் தேடி அச்சிட்டவர் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி ஆசிரியர்களிலொருவராகிய மிஸ்டர் J. W. அருட்பிரகாசம் B. A. அவர்கள். இவருடைய தமிழபிமானம் மெச்சற்பாலது. அகப்பட்ட ஏட்டுப்பிரதியிற் சிலபாகங்கள் செல்லாய்ப்பட்டமையாலும் எழுதினோரால் சேர்ந்தவழுக்கள் மிகவுமுள்ளமையினாலும் பதிப்பாசிரியர் அச்சுப் பிரதியில் ஒருபக்கத்து ஏட்டுச்சுவடியின்படி அச்சிட்டு எதிர்ப்புறத்தில திருத்தங்கள்செய்து அச்சிட்டும் வெளியிட்டிருக்கின்றனர். இந்நூலை யாழ்ப்பாணத்தவர்கள் படிப்பதுநன்றாம். இதன் விலை சதம் 60. எமதுபார்வைக் கனுப்பிய பிரதியை உவந்தேற்றோம்.

கிறிஸ்தவர் ஆராய்ச்சியும் சைவநன்மக்கள் கொள்கையும்:—இந்நூல் 'கிருசபலி ஆராய்ச்சி' "சைவரும் மச்சமாமிசமும்" "புதுச்சைவம்" என்னும் மூன்றுபத்திரங்கட்குங் கண்டனமாயுள்ளது. இதனையியற்றியவர் இலங்கைச்சைவபரிபாலன சபை ஆசிரியர் ஸ்ரீ. த. ஆறுமுகநயினார் பிள்ளையவர்கள். நூல் தக்கபிரமாணங்களோடும் கூட்டமான ஆராய்ச்சியுடனும் இனிய தமிழ்வசனநடையில் எழுதப்பெற்றுள்ளது. அச்சிட்டுவெளியிட்டவர்கள் மேற்படி சபையாராவர். இதன் விலை ரூபா க. சைவசமயிகள் இந்நூல் அவசியம் படித்தல் வேண்டும். எமது பார்வைக்கனுப்பிய பிரதியை நன்றியறிதலுடன் ஏற்றோம்.

தந்திச் சமாச்சாரத் திரட்டு.

ஜர்மனி.

ஐக்கிய தத்துவ ராசாங்கத்தினருக்கு நஷ்டஈடு கொடுப்பதைப்பற்றிய ஒழுங்கு செய்யும்படி அமரிக்க பிரஜாதிபதியாகிய மிஸ்டர் ஹார்டிங் என்பவருக்கு ஜர்மனியர் விண்ணப்பஞ்செய்திருக்கின்றனர். இந்த விண்ணப்பத்தை மிஸ்டர் ஹார்டிங்கும் ஏற்றுக்கொண்டனர்.

அமரிக்க பிரஜாதிபதி மத்தியஸ்தராதற்கு மறுத்தனரேனும் ஐக்கிய தத்துவ ராசாங்கத்தினர் இணக்கத்தால் ஜர்மனியருடைய விவகாரத்தைத் தீர்த்துவிடுதற்கு உடன்பட்டிருக்கின்றனராம்.

கிரேக்க துருக்கிய யுத்தம்.

சிற்றாசியாவில் ஆங்கில போர்வீரர்களும் கிரேக்க சைனியத்தோடு சேர்ந்து யுத்தஞ்செய்கின்றனரென்றசெய்தி உண்மையல்லவென ஆங்கில சைனியத் தலைவர் வெளியிட்டிருக்கிறனர். ஏப்பிறல்மீ 18உ பிரசா என்னுமிடத்தில் கிரேக்கர் பகைவரைத் தாக்கத் தலைப்பட்டனர்.

சிற்றாசியாவிற்குத் துருக்கியசைனியத்தை ஏற்றிக்கொண்டு சென்ற ஒரு பல்கேரிய கப்பலைக் கிரேக்கர் மாமோராக்கடலிற் பிடித்தனர். சைனியம் கப்பலுடன் கைதிசெய்யப்பட்டது.

அயர்லாந்துக் கலகம்.

ஏப்பிறல்மீ 22உ கோர்க் என்னுமிடத்தில் 50 தபாற்காரர் காகிதங்களை ஊரவர்களுக்குக் கொடுக்கும்படி புறப்பட்டபோது ஆயுதந்தரித்த கலகக்காரர்கள் அவர்களிடத்துள்ள காகிதமுதலியவற்றைப் பிடுங்கிக்கொண்டு வண்டியிலேற்றிச் சென்றனர். கிளாஸ்வல் என்னுமிடத்திற் கலகக்காரர் புகைரதப்பாதையைச் சேதப்படுத்திப் பண்டம் ஏற்றிவந்த ஒரு புகைவண்டித்தொடரைப் பாதையினின்றும் விலகச்செய்து சேதப்படுத்தினர். 41 பெட்டிகளைக்கொண்டதும் பெல்பாஸ்ற் என்னுமிடத்திற்குப் பொருட்களை யேற்றிக்கொண்டுசென்றதுமான புகைவண்டிகளையுந் தீக்கிரையாக்கினர்.

கடிதம்.

சங்கீதத்தால் மோட்சமடையலாம்.

(முற்றொடர்.)

தற்காலத்தில் நம் யாழ்ப்பாணத்தவருள் அனேகர் சங்கீதத்தினருமையையும் அதன் பெருமையையு முணராது, பூரணமாய் நன்கு கற்றுணர்ந்தவர்களைப்போல நடித்தும் தாம் ஏதோ கனமாயறிந்ததாய்க் காண்பித்தல் தம்மைத் தாமே வியந்து கூறுதலாகிய கீழ்க்குணத்தை மேலாகக் கொண்டொழுகுகின்றனர்.

தில்லானா=தோம்ரி - காவடிச்சிந்து முதலியவற்றைத்தானும் அபசுரமின்றி சுதி-லயம் முதலியவற்றோடு கிரமப்படி பாடுதற்குத் தக்க யோக்கியதை யில்லாதவர்கள் அனேகமே வீட்டிலேயே தாம் சங்கீதத்தில் அதிக தேர்ச்சி யடைந்தவரென்றும், அதனைக் கற்பதற்கு இந்தியாமுதலிய இடங்களுக்குச் சென்று பொருட்செலவு செய்து வெகு சிரமத்துடன் வருந்திக் கற்றதாகவுஞ்சொல்லி மெச்சுகின்றார்கள். மேற்கூறியவற்றினால் ஒருவன் சங்கீதத்தைத் தெரிந்துகொள்வ தெங்ஙனம்.

சட்ஜமம்-ரிஷபம்-என்கின்ற சுரஸ்தான பேதங்களை குருமுகமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய வித்தையேயன்றி சாதாரணவித்தையன்று. கேள்வியினால் ஒருவன் பாடுகின்ற பாட்டு பூச்சுப்பொன்போலாகின்றது. யாழ்ப்பாணத்திலே நடக்கின்ற எல்லாவித பிரசங்கங்களையுஞ் சாதாரணமாய்ச் சங்கீத கதாப்பிரசங்கமென்று இலங்கையாப்பத்திரிகைகளிலெழுதித் தமது சாமர்த்தியத்தைப் பகிரங்கப்படுத்த முயல்கின்றார்களே தவிர உள்ளபடி சங்கீத சாஸ்திரத்தை நன்கு கற்றறிந்தவராகார். நமது சைவசமய குரவர்களாலே திருவாய்மலர்ந்தருளிய தேவாரப் பண்முறைகளையாவது பண்ணோடு ஓதவும் அதன் சாராம்சங்களைத் தெரியவு மியல்பில்லாதவர்களி லநேகர் முப்பது ரூபாவைக் கொடுத்து ஓர் ஆர்மோனிய வாத்தியப்பெட்டியை வாங்கிவைத்துக் கூச்சலிடுவதன்றியும், பக்கவாத்திய சகிதமாய்க் கேட்போர் மனமுருகும்படி பிரசங்கஞ் செய்யப்பட்டதென்று உபசார வார்த்தையையு முண்டாக்கிவிடுகின்றனர். இவ்வித பிரசங்கங்களைச் செய்வோர் யாழ்ப்பாணத்தி லதிகமன்று, அங்ஙனமிக்கதாப்பிரசங்கமென்றதைப் புதிதாய் ஸ்ரீமத் சுவாமி சங்கரசுப்பிரமணிய ஐயராகிய பக்த சிரோன்மணியானவர் அநேக வித்துவான்கள் நிறைந்துள்ள ஆலயங்களிலும் மடங்களிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சூழ்ந்திருக்கப்பட்ட மகாசபைகளிலே வெகு விசேஷமாகப் பக்கவாத்தியங்களோடு முதன்முறையாகப் பிரசங்கஞ் செய்து வழி காண்பித்திருக்கின்றனர்.

நம் யாழ்ப்பாணத்திலே சங்கீதந் தெரிந்தவர் சிலரே. ஆதலால், சங்கீதங் கற்க விருப்பமுள்ளவர்கள் இவ்வித்தைக்குரியதாகிய மகத்துவத்தை ஏளனஞ்செய்யாமல் அதிக சிரத்தையோடு சங்கீதத்தைக் கற்ற ஒருவரிடத்திலே இடைவிடாது கற்பது மகா விசேடம். அதிலும் இவ்வித்தையில் அதிக சாதுரியமான வித்துவான்களாகிய பிராமணர்களிடத்திலே கற்றுக்கொள்வது உசிதம். வேதோத்தமான வித்தையாகையால் பிராமணர்களே விசேடமுடையர்.

ஆதிகாலத்திலே சங்கீத சாஸ்திரத்திலும் பாடுவதிலுமதிசமர்த்தர்களான மகாவித்துவான்களிருந்தார்கள் அவர்களுள் பிரமஸ்ரீ. தியாகராஜசுவாமிகள் முதலான பிராமணோத்தமர்களால் ஆக்கப்பட்டவனேக சாஸ்திரப்புத்தகங்கள் இக்காலத்திலுள்ள நம்மவர்க்கு மிகவுதவியாயிருப்பதைக் காண்கின்றேம். இப்புண்ணியசீலர்கள் கருணைகூர்ந்து வெளியிட்டதனால் அவைகொஞ்சமாவது, இதன் அருமையை விளக்கிக்காட்டுகின்றன.

சரளி, வரிசை, அலங்காரம், கீதம், வர்ணம் முதலியவற்றைச் சுதி லயத்தோடு பாடினாலன்றி ஸ்வரக்கியான முண்டாகாது இதுபற்றியே "தரியுங்கீதமுஞ் சோதிமுன்பத்தியாற் - கெதியிலேறிடக்கேட்டனர். என்றும் கீதத்தை மிகப் பாடுமடியார்கள் குடியாக, என்றும் கூறிப்போந்தனர் ஆகையால் கீதத்தின் காலப்பிரமாணத்தையும் விதித்தனவற்றைத் தெரிந்தவராகியும், பிடில். வீணை, முதலிய வாத்தியங்களிலப்பியாசமுள்ளவர்களிடத்திலேயே பாடல் கேட்டுத்தெரிந்துகொள்ளல் வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள பெண்பாடசாலைகளிலுமிதனைப் படிப்பிப்பது ஆவசியகம். கன்னியாஸ்திரிமடங்களிலுள்ள பெண்மணிகளுக்கு யிவ்வித்தையை அத்தியாவசியம் கற்பிக்கவேண்டும்.

மேலைத்தேச வாசிகளுடைய சங்கீதத்திலும் பார்க்க எத்தனையோபன்மடங்கதிகமான வின்பத்தைத்தருவது எங்களுடைய கீதம் ஆதலால் மு[illegible]ராய் (Convent) மடத்ததிபர்களிதனைச் சி[illegible]க்கடவர்.

'செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம்' என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரருளிச் செய்தார்.

மறுமுறை நாத-சப்த என்பன முதலியவற்றிலிருந்து தொடர்பாயெழுதுவோம்.

இங்ஙனம்,
இ. வலாம்பிகையம்மாள்,
"அக்கிராசனர்"
சங்கீத-கான-சபை.

தமிழ்மக்களுக்கு ஒரு விஞ்ஞாபனம்.

நமதுகடமை.

எனதன்புள்ள சகோதர சகோதரிகளே,

நம்மால் எவ்வகையிலும் தகுந்த மாறுதவி செய்யமுடியாத பேருதவியை நமக்குச் செய்பவர்கள் அனேகருண்டு. அப்படிச் செய்பவர்களில் எங்கள் இந்துசாதனமாகிய சிகாமணியுமொருவரே. இவர் குருவாரந்தோறும் தன்னாற் கூடியளவு தமிழ்மக்களுக்கு பெரியோர் இதியோர் என்ற தாட்சணிய மின்றி சற்போதனையைப் புகட்டிவிடுகிறாரென்பது எவரும்மறுக்கொணாத உண்மை.

"செய்யாமற் செய்த உதவிக்கு
வையகமும் வானகமுமாற்றலரிது"
என்றார் பெருநாவலரும்.

தமிழ்மக்களாகிய நாங்கள் செய்யும் உதவியானது இந்துசாதனத்திற்காகவல்ல, எங்கள் சாதி முன்னேற்றத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும், தமிழ்பாஷையை வளர்த்தற்குமே. கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று காலத்தை யோட்டுமிக்கலிகாலத்தில் இத்தன்மையான புத்தி புகட்டவும் நம்பாஷையை வளர்க்கவும் இவ்வித பத்திர மில்லாவிடில் சிறிது காலத்துள் எமது கதி யாதாய்முடியும்! எங்கள் சிறுவர் சிறுமிகளின் கதி எவ்விதமாகுமோ வென்று அறிவின் மிக்க பெரியோர்களே சற்றேசிந்தியுங்கள். எங்கள் தமிழ்ப்பாஷையின் மகத்துவத்தை யெவ்வளவென்று யூகிக்கப்போமா! பண்ணார்மொழி மங்கையோர்பாகருடையானே, மிருகண்டமகாமுனிவரின் புத்திரராகிய மார்க்கண்டேயருக்கு மாறுநாள் முகனுங்காணா வுருவைக்கொண்டு எதிரே வந்து காட்சிகொடுத்து அம் மார்க்கண்டேயனைப்பற்றி வந்த காலனுருயிரைச் செகுத்தவனே, அடியேங்கள் உய்யுமாறு இப் பாஷையைத் தந்தாரென்றதை பின்வரும் செய்யுளுள் காண்க:—

> "வடமொழியைப் பாணினிக்குவகுத்தருளி யதற்கிணையாத், தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங், குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகரெனில், கடல்வரைப்பினிதன் பெருமை யாவரே கணித்தறிவார்"
> (காஞ்சிபுராணம்,)

ஆனதுபற்றி இதன் பெருமை இவ்வளவென்று கூறுஞ்செயலன்று. ஆகையால் சமயம் வாய்த்தபொழுது பிரதியுபகாரம் செய்வதல்லவோ நீதி. எங்கள் இந்துசாதனம் கூறுவது தனக்கு தற்சமயமிருப்பதைவிட இன்னும் சந்தாதாரர்கள் வேண்டுமென்பதாம். இப்பத்திராதிபர்க்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு நண்பர்களைச் சிநேகஞ் செய்து வைப்பது ஒருகாரியமல்லவே. ஐயோ, பேனை, பென்சில், கடுதாசி, வேலையாட்களின் சம்பளம் முன்னிலும் மும்மடங்குகூடிய இக் காலத்தில் இவ்விதமான ஒரு பத்திரத்தைக்கொண்டு நடத்துவதென்றால் எவ்வளவு சிரமமென்று சிந்தியுங்கள். இப்போது ஏறக்குறைய முப்பத்திரண்டு ஆண்டுகளாக தனது சொந்த சிரமங்களை அலட்சியம் செய்து யாம் கடைத்தேறுமாறு செய்த பேருதவிக்குக் கைம்மாறாக நாம்செய்யுமுதவி பெரிதோ:

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது." அல்லவோ.

ஒன்றொருபயன்தனை யுதவினோர்மனங்
கன்றிடவொருவினை கருதிச் செய்வரேற்
புன்றொழிலவர்க்குமுன் புரிந்தநன்றியே
கொன்றிடுமல்லது கூற்றும்வேண்டுமோ.

நேயர்களே:—நாம் தேகநிலைமை யோடிருந்து பொருள் சம்பாதித்த காலத்து வெகு சிரத்தையாய் உபசரித்துவந்த பந்துக்கள் முதலானவர்கள் நாம் சம்பாதியாது வியாதியினால் அல்லது கருமவசத்தினால் அவஸ்தைப்பட்டுப் படுத்திருக்குங் காலத்து நம்மைக்கவனியார்கள். காலமெல்லாம் இவர்களுக்கே உழைத்து இவர்களே கதியென்று நம்பியிருக்கும் பணக்காரர்களே, படிப்பாளிகளே பெரியமனுஷர்களே, உங்கள் இந்த மகிமையாகிய இராசமாளிகையும், தாயாகிய தமிழும் நமக்கு விழுந்து கடைக்காலும் குட்டிச்சுவருமாயிருக்கின்றனவே, இதைப் பழையபடி கட்டிவைத்துப் பரிபாலிக்கும் நல்லூழ் உங்களுக்கு எப்போது உண்டாகும்?.

எக்காலிருப்பினு மிறப்பது நிச்சயம்
பொன்னாட்டிலிந்திரனாயினும் பொன்றுவன்.

என்றபடி நம்காலத்தை சற்கருமங்களில் செலவழிப்பதே நாமெடுத்த தேகத்தின் ஐசுவரியமாயிருக்கட்டும். ஆகையால் தமிழபிமானிகளே, உலகமாதாவாகிய பரமேஸ்வரியே தருமத்தை நிலைநிறுத்தினளென்றால் இந்த மானுடயாக்கையைச் சுமந்த அடியேங்கள் உய்யுமாறு, தருமங்களில் முதன்மை பெற்ற தருமமாகிய வித்தியாதர்மத்தை கையேற்று நடத்தும் இந்துசாதனமென்ற தீபம் என்றும் தளராதபடி குன்றிலேற்றிய தீபம் போல் பிரகாசிப்பிக்க முன்வருவீர்களாகில், சத்துச்சித்தாநந்த நித்திய பூரணஞானாகாசபரம்பொருளாயும் சுமங்கல நிராலம்ப சுயம்பாகாச பிரபல சுகோதய பரம்பொருளாயும் பிரணவாதீதமாயும் பிரம்மானந்த ஸ்வரூபமாயும் பிரம்மாதிஸ்தம்பபரியந்தம் உயிர்க்குயிராயும் அவனியாக்கி, அளித்துத்துடைத்தற்கேதுவாயும் நிலைபெற்றபரிபூரணமாயிராநின்ற திரிசேத்திரங்களையுடைய ஐயன் அருளைப் பெறுவீர்களென்பது, சத்தியம், சத்தியம்.

இங்ஙனம்,
பிரே[illegible] தங்களடிமை,
மலாய்ஐக்கியதேசம், இராமலிங்கம் இராசா,
21-4-21.

கனந் தங்கிய நமது சுருட்டு வியாபாரிகட்கு ஓர் எச்சரிக்கை.

நண்பர்காள்!

சில காலமாக நீவிர் செய்து வருஞ் சுருட்டு வியாபாரம் அபரபக்கச் சந்திரன்போல அருகி வருகின்றதே! இங்ஙனம் இந்தத் தொழில் காலத்துக்குக் காலம் நட்டத்துக் கேதுவாய் வருகின்றதென்பதனைக் கவனித்துப் பார்த்தீர்களா? பெருமைக்காக நட்டமான வியாபாரத்தைச் செய்வது புத்தியாகுமா? கணக்குப் பாராமல் கண்மூடித்தனமாகத் தொழில் செய்தால் முடிவில் கள்வன் என்று பேர் கேட்கவேண்டி வருமே! "எழுதி வாழாதான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்" என்னும் முதுமொழியை நீவிர் அறியவில்லையா? அங்ஙனம் நட்ட வியாபாரமென்று தெரிந்திருந்தால் பின்னரும் அதை என் செய்யவேண்டும்? இதற்கு முன்னே நடந்த சம்பவங்கள் போக, சென்ற வருஷத்தில் உங்கள் புகையிலைக் கொள்முதற் கணக்கையும், சுருட்டு விற்ற கணக்கையும் பிடித்து இலாப நட்டம் இவ்வளவென்று ஒத்துப் பார்த்தீர்களா? சென்ற ஆண்டு மட்டக்களப்பு, கண்டி, மூலைத்தீவு, பச்சிலைப்பள்ளி முதலிய ஊர்களிற் போய்ப் புகையிலை வாங்கிவந்து உங்களுக்கு விற்கும் சில்லறை வியாபாரிமார் ஆயிரம், 15, 16-ரூபாய்க்கு வாங்கிய தாவளிகளை, 34, 35-ரூபாய்க்கு உங்களுக்கு விற்றிருக்கின்றார்களே! ஐயையோ! இப்படியான கொடுமை எத்தேசத்திலுண்டு! இங்ஙனம் நீவிர் ஒருவரோடொருவர் எதிரி பண்ணி ஒவ்வொரு தினிசுக்கும், ஒட்டிக்கு இரட்டி விலை கொடுத்து வாங்கிப் பெருமைக்கு வியாபாரஞ் செய்தால், வரும் ஊதியமென்ன? இந்த வருஷம் ஒவ்வொரு வியாபாரிகட்கும், அவரவர் முதலுக்குத் தக்கபடி ஐயாயிர ரூபாய் தொடக்கம் பதினாயிர ரூபாய்க்கு மேல் நட்டம் வந்திருக்கின்றதே! இங்ஙனமாக வருஷந்தோறும் நட்டங் கொடுத்துக்கொண்டு வந்தால், முடிவில் எக்கதியிற் செலுத்துமென்பதை நீவிர் சிஞ்சித்துஞ் சிந்தியாதிருப்பதற்கு நியாயம் என்னே? உங்கள் செய்கையை நோக்கும்போது, "பிள்ளை வரத்துக்குப் போய் புருஷனைப் பறி கொடுத்தது" போலாகி விட்டதே! "குளத்தைக் கலக்கிப் பருந்துக்கிரை கொடுக்கலாமா"? செட்டிப்பிள்ளைகளிடத்தில் ஒன்றரை வட்டி இரண்டு வட்டிக்குப் பணம் வாங்கிச் சில்லறை வியாபாரிகட்கும் ஒன்றுக்கு நாலு இலாபம் கொடுத்துத் தொழில் நடத்தினால் நீங்கள் முன்னுக்கு வருவதெப்படி? சில்லறை வியாபாரிகள் கடன் தருகிறார்களென்ற எண்ணத்தினால், அவர்கள் சொன்ன விலை கொடுத்து வாங்கித் தொழில் செய்து முடிவில் எப்படியாவது அவர்களுடைய முதலைக் கொடுத்துப்போடுகிறீர்கள் தானே. அந்தப் பணத்தை முன்னரே சரிப்

பண்ணிச் சையில் வைத்துக்கொண்டு: இப்படியான கன்னக் கடன்படாமல், காலுக் குறைகளுக்கு நேரே நீங்கள் போய்ச் சரக்குக் கட்டிக்கொண்டு வந்தால், சில்லறை வியாபாரிகட்கு அநியாயமாகத் தண்ட விறுக்கும் தொகை உங்கட்கு மிச்சப்படாதா? இவ்வளவு இட்டோட்டந் தெரியாமல் இளிச்சவாய்த் தனமான காசசலை செய்வாருண்டா? இவ்விதம் இலாப நட்டம் பாராமல் மெனட்டிகத் தனமாகச் செய்துவரும் வியாபார நடப்புகளை வீட்டிலுள்ள பெண்களுங் கேட்டால் நகையாடுவார்களே! வருடத்திலே இரண்டு மூன்று மாசம் பல ஊர்களிலும் போய்ச் சரக்கு வாங்கி வந்து அடுக்கி வைத்துக்கொண்டு, அதைப் பிரித்தடுக்கும்போது சொரிகின்ற புகையிலைகளை நித்தது வருடத்தில் ஒருபெட்டி இரண்டுபெட்டிசுருட்டுச்சுருட்டுவித்து அதைக்கொண்டு போய்க் கொழும்பு முதலிய இடங்களில் விற்றுத் துண்டான லாபம் சம்பாதித்துக்கொண்டும், மற்றப் புகையிலையை உங்களுக்கு ஒன்றுக்கு மூன்று லாபம் வைத்து விற்றும், பலவழியாலும் அவர்கள் ஒவ்வொருவரும் வருடத்தில் நாலாயிரம் ஐயாயிரம் ரூபாய் சம்பாத்தியஞ் செய்து தனவந்தராயிருக்க, நீவிர் வருஷம் முழுதும் செக்கிழுக்கும் மாடுகள்போல அனுக்கணமும் ஆறுதலின்றிப் பாடுபட்டு முடிவில் ஐயாயிரம் பதினாயிரம் கட்டமுங் கொடுத்து வெறுவிலிகளாகப் போகலாமா? உங்களிடத்தில் ஒற்றுமையில்லாமையே இந்நிலைமைக் கிணைத்திருக்குங் காரணமென்பதை நம்புங்கள். ஆதலால் நீரும் தர்மதி வருவதற்கிலாவது நீவிர் புகையிலை விளையும் ஊர்களில் சேர்ந்து போய்ச் சரக்குகளைக் கட்டிக்கொண்டு வர்தும், அல்லது சில்லறை வியாபாரிகளிடத்தில் இன்ன நிறுக்கு இன்ன விலைக்குமேல் வாங்குவதில்லையென்றும், விற்கும் தலங்களிலும் இன்ன தரவளி இன்ன விலைக்குக் குறைய விற்கக்கூடாதென்றும், உங்களுக்குள்ளே எழுத்து மூலமாக திரணமான கட்டுப்பாடு பண்ணிக்கொண்டு நடத்தினால், இந்தத் தொழிலை இன்னுங் கொஞ்சக் காலத்துக்குச் செய்து வருவீர்கள். அதுவன்றிக் கண்மூடித் தனமாக இன்னுஞ் சில்லறை வியாபாரிகள் சொல்லும் விலை கொடுத்து வாங்கித் தொழில் செய்து வருவீர்களானால், 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியானதுபோல" உள்ள முதலும் போய் அளத்தற்கரிய கடனுக்கும் ஆளாவீரென்பது திண்ணம்.

நீவிர் யாவரும் புதுப் புகையிலை வாங்க இறுப்பைக்கடவை முதலிய இடங்களுக்குப் புறப்படுவதற்கு முன்னே பொது இடத்தில் எல்லோருஞ் சேர்ந்து ஒரு சபை கூட்டி, இன்ன நிறுக்கின்ன விலைக்குமேல் வாங்குவதில்லையென்று முடிவான நியதிபண்ணிக்கொண்டு புறப்படுவது உங்கட்கு மிகுந்த நன்மைக்கேதுவா யிருக்கும்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள
சுருட்டு முற்கத்தன்
ச. காசிப்பிள்ளை.

சிவலீலாமிர்த தரங்கிணி.

தரங்கம்—ரு.

திருவவதாரப் படலம்.

இந்திரனாற் கண்டுபிடிக்கப்பட்ட கடம்பவனத்தின் விசேஷங்களைக் கேள்வியுற்ற மலயத்துவஜ பாண்டியன் அவ்வனத்தை வெட்டுவித்து நன்னகராக்கினன்.

இவரசனது சற்குணங்களோ அளவிடற்கரியன. அகத்தூய்மையின் வெற்றியை ஆபரணமாக அணிந்தவன், கருணாகரன், காட்சிக்கினியன், வடநூற்கடலும் தென்னூற்கடலும் நிலைகண்டுணர்ந்தவன். இவன் சூரசேன சோழராஜனுடைய புத்திரி காஞ்சனமாலையை விதிப்படி வதுவையாற்றிப் பதினாயிரமாண்டு அரசாட்சி செய்து சோமவாரவிரத முதலியன அநுட்டித்தும் புத்திரபாக்கியமின்மையால், அது பெறக் கருதி அஸ்வமேதயாகஞ்செய்யத்தொடங்கினன். அவ்யாகத்துக்குரிய நூறு யாகத்தில், நித்தியமாகிய வேதமுறைப்படி தொண்ணூற்றொன்பது யாகமுஞ் செய்ய, அதனை உணர்ந்த இந்திரன், "நூறு யாகஞ்செய்யின் எமது பதவி கணத்திலே ஒழியு' மெனக் கருதி அவ்யாகத்தைத் தடுத்து, "பாண்டியராஜனே, நீ நல்ல புத்திரப்பேற்றை இச்சித்தால், அதற்கிணங்க, உலகத்தார் இன்புறத் தக்க புத்திரகாமேஷ்டி யாகத்தைச் செய்யின் அப் புத்திரப்பேற்றை அடைவா" யெனக் கூறி அமராவதியை அடைந்தனன்.

இதனைக்கேட்ட பாண்டியன் புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்யும் விருப்பமுடையனாகி அதற்குரியவைகளைத் தேடி, தகுந்த நியமத்தோடு மனைவியுடன் யாகசாலையிற் போயிருந்து அவ்யாகஞ் செய்யத் தொடங்கினன்.

கேள்வித் தீயினால் யாகசாலையிலெழும் புகை எவ்விடத்தும் பரந்து ஒரு போர்வை போல மறைக்க, வேதவிதிப்படி செய்யை யாககுண்டத்தில் நிறைந்து அக்கினியை வளர்த்தனன.

அப்பொழுது சிவபிரான் தனிமையாகவும், எல்லாவுலகமும் மகிழ்ச்சியடையவும், சைவசமய மோங்கவும், பாவமொழியவும், புண்ணியங்கள் மகிழவும், வேதங்களும் தர்மங்களும் தழைக்கவும், அமரர்கள் ஆடவும், தமிழ்நாடு சிறக்கவும், பாண்டியன் சிறப்படையவும், யாககுண்டத்தலே அழகொழுகும் இதழ்களையுடைய அலர்ந்த புதிய கமலமலரும் நெருங்கிய தளிருமன முழுள்ள ஓர் கொடி முளைத்தெழுவதுபோல், உலகமாதாவாகிய மீனாட்சி தேவியார் மூன்று பராயமுள்ள ஓர் பிராட்டியாராக நின்றருளினார்.

அவரது ஒளிவிட்டு விளங்கும் முத்துச்சூழியம் விழுங்கிய சிறியவுச்சிக்கொண்டை, சந்திரனிடத்துள்ள சிறிய முயற்களங்கம் போலவும், அச்சூழியத்திற் கட்டித் தொங்கவிட்ட முத்துமாலையோடு கூடிய சுட்டி, அச்சந்திரனிடத்துப் பார்த்துறும் நக்ஷத்திரம் போலவும் விளங்கின. திருநெற்றியின்று குதலைமொழியாகிய இனியதமிழ் மாரியின் வழியொழுங்குபோல அவர் மார்பிலிருந் தொழுகும் முத்துவடம் விளங்கிற்று. இளஞ்சூரியனது கிரணத்தைத் தோற்கடிப் பவளமாலை ஒளிவீசியது. அழகிய மணியழுத்திய சிறிய வெள்ளோலை மோசலை ஒலித்தது. ஒளியுடைய அழகிய இரத்தின குண்டலத்தை யசைப்பித்திய சூழ்ந்த விருளைப் போக்கிச் சிறிய தோள்களை வருடியாடிற்று.

அரசன் தேவியாகிய காஞ்சனமாலை, எளிதிற் பெற்ற தனது புத்திரியாரை எடுத்தணைத்து, உச்சிமோந்து, முத்தமிட்டு, ஆனந்தக்கண்ணீர் சொரிந்து பரவசமடைந்தார். ஞானவுணர்வுடைய பெருக்கே திருவுருக்கொண்ட தேவியார் தமரன்பிறும் வெளிவந்து ஓர் புத்திரியாராய் அவதரித்த அருளையும், தன் மனைவியின் தவப் பயனையும் பாண்டியன் தெளியாதவனாகி, "யான் புத்திர பாக்கியமின்றி வருந்திப் புத்திரகாமேஷ்டியாகஞ் செய்தேன் அவ்யாகமும் ஓர் புத்திரியைக் கொடுத்தது" என்று சிந்தித்து மிக வருந்தினன். உடனே ஆகாயத்தினின்றும் "அரசனே, உன்னுடைய புத்திரிக்குப் புத்திரர் போலச் சடங்குகளை வழுவாமல் வேதவிதிப்படி புரிந்து தடாதகையென்று நாமகரணஞ்செய்து மகுடஞ்சூட்டுவாய். பொன்போன்ற இவ்வருமைமகளால் நீ பெருமையடைவாய்" என்று ஓர் திருவாக்கு உண்டாயது. இதனைச் செவியுற்ற அரசன் அன்பும் மகிழ்ச்சியுங் கொண்டு ஆனந்தக்கண்ணீர் பெருகச் சிவபிரானைப் புகழ்ந்து யாகத்தைப் பூர்த்திசெய்து, மனைவியுடன் அவ்யாகசாலையினின்றும் நீங்கித் தனது மாளிகையில் பிரவேசித்துக் குடிகள் உவக்குமாறு பலவேறுவகைப்பட்ட தானதர்மங்களையும் செய்து, சிவபிரான் கட்டளைப்படி சாதகர்ம முதலியன முற்றுவித்துத் தடாதகையென்னுந் திருப்பெயரிட்டழைத்து வளர்த்துவருவானுயினன்.

தடாதகைப் பிராட்டியார் சிறு பெண்கூட்டங்களோடு வீதியிற் சென்று சிறுவீடுகட்டி அப்பெண்களுக்கு மணற்சிறு சோறு சமைப்பார். தோழிமார்க்கு விளங்க ஆடிக்காட்டுவார் போலக் கழங்கும் பந்தும் அம்மனையும் ஆடுவார். அவ்மாக்களாகிய ஊசலை விளையாட்டிற்றூக் கட்டும் அப்பிராட்டியார், அச்செய்கையைக் குறிப்பாகக் காட்டல்போல், முத்துவடப்பூட்டியவூசலாடுவார். இச்செய்கைகளினால், மாதா முதலியோரை மகிழச்செய்த பிராட்டியார், பிதாவையும் மகிழச் செய்வாராய் வேதமுதலிய அறுபத்துநான்கு கலைகளையும் ஓதாதுணர்ந்தார்.

கலையுணர்ச்சியும், ரத கஜ துரகங்கள் செலுத்தும் வன்மையும், அம்புசெலுத்தும் படைத்தொழில் வலிமையும் நோக்கி, மூப்பினை யுடைய பாண்டியன், தனது புத்திரியார்க்கு மகுடாபிஷேகஞ் செய்தலைக் கைக்கொண்டனன். சுமதியென்னு மந்திரி மகுடாபிஷேகத்திற்குரிய சுபதினம் நிச்சயித்துத் திக்குகளெங்கும் திருமுகமனுப்பி மணிமுடியரசரையழைப்பித்து, மதுரை மாநகரத்தா ரெல்லாரும் மனைகடோறுஞ் சிறப்புச்செய்து அலங்கரித்து மகுடாபிஷேகமகோற்சவத்திற்குவேண்டுவனவற்றைத்தேடினன்.

பின்பு மலயத்துவஜபாண்டியன் மங்கலவாத்தியங்களொலிக்க யானைமீது ஏற்றிக்கொண்டுவந்த நவதீர்த்தங்களையும் பொற்குடங்களி[illegible]த்து அக்கினிகளர்த்து, அமரர்களுக்கு அ[illegible]பாகங் கொடுத்து இரத்தினசிங்காசனத்தைப் பூசித்து, மகுடத்தை யானைமேலேற்றி நகர்வலஞ் செய்து, பிராட்டியாரை அச்சிங்காசனத்திலெழுந்தருளச் செய்து குடங்களிலுள்ள தீர்த்தங்களை அபிஷேகித்தனன். பின்பு, தேவர்கள் மந்தாரபுஷ்பவருஷஞ் சொரியவும், முனிவர்கள் ஆசிர்வதிக்கவும், மங்கலவாத்தியங்க ளொலிக்கவும், வேதங்கள் கோஷிக்கவும், இரத்தினமகுடஞ்சூட்டி, எங்கள் கருணைப்பெருமாட்டியார்க்குத் தனது போரசனி யமையக் கொடுத்துச் சந்திரன்போலும் வெண்கொற்றக்குடை மேலே நிழலைச் செய்யவும், அச்சந்திரன் கிரணங்களைப் பரப்பியதுபோலச் சாமரைகள் பக்கங்களில் வீசவும், உதயகால சூரியன் வெள்ளியங்கிரியி லுதித்தாற்போல, வேப்பம்பூமாலையணிந்த மகுடத்தையுடைய மங்கையர்க்கரசியாரை, வெள்ளையானைமேலேற்றி நகர்வலஞ் செய்வித்துக் களித்தனன்.

தனது செல்வப் புத்திரியாரின் மகுடாபிஷேகோற்சவத்தைக் கண்டுகளித்துச் சிலதினஞ் சென்றபின் பாண்டியன் விண்ணுலகடைந்தனன்.

தடாதகைப் பிராட்டியார் விரதங்களை அநுட்டித்து, அபரக்கிரியை முதலியவற்றைப் பிதாவுக்கு விதிப்படி செய்து, உலகமுற்றும் ஒரு வெண்கொற்றக் குடைக்கீழ் ஆளுவாராயினர். நித்தியம் சூரியோதயமாக ஐந்துநாழிகைக்குமுன் சயனத்தினின்று நீங்கி, வாசனை தீர்த்தத்தின் மூழ்கிச் சிவபூசை முதலியவனைத்தும் முடித்து, மந்திரிகள் சூழத் திருக்கோயிலை யடைந்து, சுந்தரேஸ்வரரை வழிபட்டுத் திரும்பித் தமது கோயில் சேர்ந்து, சிங்காசனத்தில் வீற்றிருந்தருள்வார்.

அநிந்திதை கமலினி யென்னுந் தோழியர் மாறுடனிராய் வந்து அடைப்பையுங் காளாஞ்சியுந் தாங்கவும், இலக்குமி சரஸ்வதிகள் மாறுடப் பெண்களாய்ப் பக்கங்களில் வெண்சாமரை வீசவும், சோழன் முதலிய அரசர், முடிமேலணிந்த மாலையைத் திருவடிகளிற் சாத்தி வணங்கிப் பிராட்டியாரையிழியொழுகவும், சக்கரவர்த்திகள், தத்துவஞானிகள், சோதிடநூலார், மந்திரிகள் ஆகிய அனைவருஞ் சூழவும், விசுவாதி தேவர் கடைத்தலையில் நின்று வாழ்த்தி மனத்தினியாமை நீக்கவுணர்ந்த நாவலோர் தமது நாவாகிய கழனியிற் செய்யுளாக விளைவித்து ஊட்டத் திருச்செவி திறவிட்டும்படி பருகுவார். பிராமணர் முதலியோர் அனைவர்க்கும் மகிழ்ச்சி மிகத் தேவாமிர்தமும் உவர்க்கும்படி பாகசாஸ்திரவல்லுநர் சமைத்த மூவிலையின் அறுசுவைபொன்ற அன்னமும் அறுசுவைத் தரிய மலிய நல்லுணவை யுண்பித்து அவ்வனைவரும் துதிக்கும் புகழ்பெற்ற விருந்தினை அமுதுசெய்வார்.

தடாதகைப் பிராட்டியார் மகுடந்தரித்துத் தண்ணளிய வெண்கொற்றக்குடை நீழலில் அமர்ந்து, செல்வமக கலிகளைத் தமதிருகண்களாகக் கொண்டு, மநுநூல்வழுவிய செங்கோல் செலுத்தி கன்னிப்பருவத்தே அரசாட்சிசெய்தமையின் அப் பாண்டிநாடு கன்னிநாடெனும் பெயர் பெற்றது.

இங்ஙனம்,
K. செல்லசாமான்,
ஸ்ரீ சமாத வித்தியாலயம்,

இலங்கையில் இருந்து ஒரு விளம்பரம்.

கீழ்ச்சொல்லும் குணங்கள் காணுமற்போனல்
மருந்துவிலை திரும்பக் கொடுக்கப்படும்.

அற்புதமான ஔஷதம்.

ஆயுர்வேத தாதுஸ்தம்ப வட்டிக்காவ

விலை 30-க்கு ரூபா 2 சதம் 50, அல்லது ரூபா 2 அணு 8.

தாதுபுஷ்டியும் இந்திரியக்கட்டும் இல்லாதவர்களுடைய நற்காலம்.

ஆச்சரியம்! மிக ஆச்சரியம்!!

உண்மையான ஔஷதம்.

ஒருவேளை மருந்தில் குணந் தெரியும். இந்த மருந்தானது சகலவித மேகச்சூடு, வெட்டைச்சூடு, பித்தச்சூடு முதலான உஷ்ணங்களைச் சமனமாக்கி தாதுபுஷ்டி, சரீரபுஷ்டி, முகவசீகரம், தேககாந்தி, மூளைக்குப் பலங்கொடுப்பதுடன் ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, அக்கினிமந்தம், மலச்சிக்கல், பசியின்மை, வீரியநஷ்டம் முதலான வியாதிகளைச் சுகமாக்கும். தேவாமிர்தம் இது ஒன்றுதான்.

ஆயுர்வேத பிரமேக நிவாரணி.

இதனால் குணமாகும் வியாதிகள்:—வெள்ளை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, இரத்தம் வடிதல் முதலான மேகவியாதி 21-க்கும் சஞ்சீவி.

இதன் விலை சீசா 1-க்கு ரூபா 2.

நமது மருந்துகள் வியாபாரஞ்செய்ய கமிஷன் ஏசண்டுகள் தேவை. 100-க்கு 25 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆயுர்வேத தைலம்.

ஆச்சரியமான மருந்து ஒவ்வொரு வீட்டிலும்
அவசியம் இருக்கவேண்டியது.

இதை ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

விலை சொற்பம்! குணம் அதிகம்!

இத்தமருந்தை வெளியேதேகத்தில்பூசுவதினுல்குணமாகும் வியாதிகள்.

(1) தலைவலி, கபால இடி, பிடரிவலி, தடிமல், ஜலதோஷம், நெஞ்சுவலி, மார்படைப்பு, இருமல், சக்கவிருமல், ஒருத்தலைவலி, வாந்தி முதலிய வியாதிகளும்,

(2) வாய்வு, வலிகள், சரம்புவலிகள், பிடிப்புகள், சுளுக்கு வலிகள், கைகால் குளிர்ச்சி, கெண்டை இழுத்தல், வயிற்றுவலி, வாந்திபேதிகாலங்களில் உண்டாகிற சகல வியாதிகளும்,

(3) வெட்டை வாய்வு இடுப்புவலி, முழங்கால்வலி, கணுக்கால்வலி, கைவலிகள், உளைச்சல்கள், வாதம் 80 வகைகளும்,

(4) பல்வலி, பல்லரணை, கன்ன வீக்கம், கட்டிகள், புறப்பாடுகள், மொழிவீக்கம், ரத்தக்கட்டு, சதை பிரட்டல் முதலியவைகளும்,

(5) தேள் கடி, பூரான் கடி, எலிக்கடி, விஷக்கடிகள், சிறுகுழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் உண்டாகிற இன்னும் அநேக வியாதிகள். இந்த மருந்தை நோயுள்ள பாகங்களில் பூசினதும் சுகமாகும். விலை சீசா 1-க்கு ரூபா 1—0—0.

டாக்டர் எம். சந்திரசேகரம், ஆயுர்வேத வைத்தியசாலை,
நெ. 49, கச்சேரி ரோட், குருநாக்கல். (சிலோன்.)

My Address:—**Dr. M. Santherasakaram,**
Ayurvedic Medical Hall,
Q. 9. No. 49. Esplanade Road, Kurunegala, Post. (Ceylon).

M, Sultan Abdul Cader,
SULTANIN MEDICAL HALL, PORTONOVO, S. A. Dist.

துரையே! கவனியுங்கள்.

இழந்துபோன பலத்தையும் தளர்ந்துபோன நரம்புகளையும்
ஒரேவேளை லேகியம் சாப்பிட்டபிறகு பலத்தைக் கொடுக்கும்.

மெடல் பெற்ற

சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

இந்தச் சிட்டுக்குருவிச்சத்தின் லேகியத்தைப்போல் மற்ற வைத்தியர்கள் செய்து தந்தால் 2,000 ரூபா இனும் கொடுக்கப்படும்.

☞ நண்பிற்குகந்த அன்பர்காள்! அருமையும், பெருமையும், பேரும் கீர்த்தியும்பெற்ற இந்த அற்புத குணத்தமைந்த லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மணவாழ்க்கையிலே சுகானந்த இன்பத்தை யடைவர். ஆஹா! குணத்தாற் சிறந்ததுதான் என்று பன்முறையும் புகழ்வர் புருஷரென்ற இப்பூவுலகில் பிறந்து வளர்ந்துவரும் பால்யபருவத்தில்சிற்றின்ப ஆசையென்னும் மின்னுர்மோகத்தில் ஆழ்ந்து தேகசத்ராமாகிய நாதவிந்தைச் செலவழித்துச் செலவழித்து யௌவனபருவத்தில் வீரியவிர்த்திகுறைந்து போகசக்திமிழந்து ஆண்தன்மையற்ற கிழவர்போல் மயங்கி நிற்கும் புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகிப் பிரமேக வெட்டைச் சூட்டால் இந்திரியம் ஜலம்போல் நீத்துப் போகத்தில் சீக்கிரம் ஸ்கலிதமாவோரும் நித்திரையில் ஸ்கலிதமுடையோரும் சுரம் மேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தங் குறைந்து தாது பலஹீனப்பட்டு நரம்புகள் தளர்ந்து பசிமந்தம், மலச்சிக்கல், இடுப்புவலி, கைகாலசதி முதலிய வியாதிகளால் வருந்துவோரும் மனோதத்துவ யுக்தியாளரான வக்கீல்கள், குமாஸ்தாக்கள் முதலியோரும் மற்றைய வேலையில் சிரத்தையுடையோரும் உபயோகித்தால் உற்சாக சந்தோஷமடைவார்கள். புதிய மெனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவார்கள். சதாகாலம் இந்திரிய ஸ்தம்பன மில்லாது போகத்தில் சீக்கிர ஸ்கலிதமுடையோருக்கு இது ஒரு இணையற்ற பரமசஞ்சீவியாகும். மருவலட்சமீ சாஸ்திரிகளுடன்கூடித் தங்கள் பூரண ஆசையை நிறைவேற்றாது சஞ்சலிக்கும் புருஷர்களுக்குச் சித்தானந்த உற்சாகத்தைக் கொடுப்பதில் பேர்பெற்றது. பரீட்சைசெய்யும் நண்பர்களுக்குப் பலனைக் கொடுக்கத்தக்கது. இந்த லேகியம் சாப்பிடும் விபரம் நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும். அதிற் கண்டபடி சாப்பிடவும். இந்த மெடல்பெற்ற சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம் சாப்பிட்டுக் குணமில்லையென்று சத்தியமாய்ச் சொன்னால் அவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். ஓர் தடவை பரீட்சைசெய்யவும்.

40 நாள்	16 பலம்	டப்பி 1-க்கு	விலை	ரூபா	10—0—0.
20 ,,	8	,, 1-க்கு	,,	ரூபா	5—0—0.
10 ,,	5	,, 1-க்கு	,,	ரூபா	2—8—0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

☞ இந்தலேகியத்துக்கு ஆர்டர்செய்யும்பொழுது இந்தப்பேப்பர்ப்பெயரைக்குறித்து எழுதவும்.

☞ பினங்கு, சிங்கப்பூர், சிலோன், குலாலாலம்பூர், பேரா முதலிய பிறதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜ் ரூபா 2-0-0 யும் சேர்த்து முற்பண மனுப்பி மருந்து பெறவேண்டும். ஷெயூரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதும் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூபா 10 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

எமது விலாசம்:—
எம். சுல்தான் அப்துல்காதர்,
சுல்தானியா வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை,
தென்னூர்க்காடு ஜில்லா.
(M. 8)

எமது சிலோன் ஏஜெண்டுகள்:—
T. D. மதுரைநாயகம் அன் கோ.,
ஞானசுந்தர வைத்தியசாலை,
நெ. 81, செட்டித்தெரு,
கொழும்பு.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva prakasa Press, Jaffna.